https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

10th DECEMBER 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 57









# கலைக்கப்படுமா நாடாளுமன்றம்?

நாடாளுமன்றக் கூட்டத் தொடரை ஒத்திவைத்து புதிய கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு முன் நாடாளுமன்றத்தைக் கலைத்து புதிய ஆட்சி ஒன்றை அமைப்பதற்கு அரசு தயாராகி வருகிறது என்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய வரவு-செலவு திட்ட விவாதம் 13ஆம் திகதி நிறைவடைகிறது. அடுத்த வருடம் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி நாடாளுமன்றம் கூடும்.

அப்படி இல்லாது கூட்டத் தொடரை ஒத்திவைத்து மார்ச் நடுப்பகுதியில் தேர்தலை நடத்துவதற்கான திட்டம் ஒன்று அரசிடம் உள்ளது என்று அரச உள்ளக வட்டாரம் தெரிவிக்கிறது.

02




## வரிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் களத்தில்

ஏயுவு வரிக்குக் கீழ் கொண்டுவரப்படவுள்ள சில பொருட்களை அந்தப் பட்டியலில் இருந்து நீக்குமாறு கோரி எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் குதித்துள்ளன.

அதன்படி வைத்திய உபகரணங்கள்,குழந்தைகளின் போசாக்கு உணவுகள்,உரம் போன்ற பொருட்களை ஏயுவு வரி பட்டியலில் இருந்து நீக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தி,ஜேவிபி,டலஸ்

02

## VAT வரி திருத்தச் சட்டமூலம் இன்று நாடாளுமன்றில்

### பெற்றோல், தொலைபேசி, கணினி, பால்மா விலைகள் உயர்வு

புதிய ஏயுவு வரி திருத்தச் சட்டமூலம் இன்று நாடாளுமன்றில் விவாதத்துக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.இதனால் இதுவரை ஏயுவு வரிக்குள் அடங்காத பொருட்கள் மற்றும் சேவைகள் ஏயுவு வரிக்குள் வரும்.

இந்தச் சட்டமூலம் நீறைவேற்றப்பட்டதும் பெற்றோல்,தொலைபேசி,கணினி ,குழந்தை பால்மா,மருந்து பொருட்கள் ,கோதுமை,இறக்குமதி செய்யப்படும் மென்பான வகைகள் போன்றவற்றின் விலைகள்

02





புதுசுடர்
www.puthusudar.lk
2023 DECEMBER 10 - SUNDAY

# வெல்ல முடியுமா?

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி பதவியை ஏற்று மிக வேகமாக ஒரு வருடமாகிவிட்டது.இன்னும் எஞ்சி இருப்பது இன்னும் ஒரு வருடம்தான்.

அடுத்த வருடம் செப்டம்பர் மாதமளவில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும்.அந்தத் தேர்தலில் மக்கள் ஆணைமூலம் தான் ஜனாதிபதியாக வேண்டும் என்பதுதான் ரணிலின் இப்போதைய இலக்கு.

எஞ்சி இருப்பது ஒரு வருடம் என்றாலும் கண்ணை மூடித் திறப்பதற்குள் காலம் ஓடிவிடும்.இப்போது இருந்தே தேர்தலுக்கான ஏற்பாடுகளை செய்தாக வேண்டும்-பிரசார பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

அதை ரணில் கச்சிதமாகச் செய்து வருவதை அவதானிக்க முடிகிறது.ஆனால்,எல்லாம் நியாயமானமுறையில் இடம்பெறுகிறதா என்று பார்த்தால் அப்படி இல்லை.

மக்கள் இன்னும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி இருக்க அவர்களின் பிரச்சினைகளை முற்றாகத் தீர்ப்பதை விட்டுவிட்டு குறுக்கு வழியில் சென்று மக்களை ஏமாற்றி வாக்குகளை அபகரிக்கும் நடவடிக்கையில்தான் அரசு ஈடுபட்டு வருகிறது.

மக்கள் இன்று பட்டினியில் வாடுகின்றனர்.வரிகள் வந்து மேலும் மேலும் மக்களை நசுக்குகின்றன. அடுத்த வருடம் வரிகள் மேலும் அதிகரிக்கப்படவுள்ளன.

ஏயுவு வரி திருத்தச் சட்டமூலம் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுகிறது எரிபொருள்,மருந்து பொருட்கள்,பால்மா வகைகள் உள்ளிட்ட பல பொருட்கள் ஏயுவு வரிக்குள் கொண்டுவரப்படவுள்ளன.

இதனால் மக்களின் நிலை அடுத்த வருடத்தில் இருந்து மேலும் மோசமடையப் போகிறது.இவற்றுக்கெல்லாம் நிவாரணம் என்ற பேச்சுக்கே இடமில்லை.மக்கள் கஷ்டப்பட்டு மடிகின்றதைத் தவிர வேறு வழியில்லை.

ஆனால்,இந்த அரசு அப்படி எதுமே நடக்காததுபோலவும் மக்கள் செல்வாக்கு தமக்கு இருக்கிறது என்பது போலவும் நினைத்துக்கொண்டு இருக்கிறது.

இதனால்தான் தேர்தல் ஒன்றுக்குச் சென்று மீண்டும் புதிய ஆட்சியை நிறுவும் கனவில் மூழ்கியுள்ளது அரசு.

முதலில் ஜனாதிபதி தேர்தல்தான் இடம்பெற வேண்டும். ஆனால்,நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு ஜனாதிபதி யோசித்துக்கொண்டு இருக்கிறார்.

அதற்கு காரணம் என்னவென்றால் ஒருவேளை நாடாளுமன்றத் தேர்தலில் அரசு தோல்வியடைந்தாலும் நாடாளுமன்றில் எதிர்க்கட்சி உறுப்பினர்களை வளைத்துப் போட்டு ஆட்சியை அமைத்துவிடலாம் என்பதால்.

அதன் பின் ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றால் ஏற்கனவே வெற்றிபெற்ற பக்கமே மக்கள் வாக்களிப்பார்கள் என்று ஜனாதிபதி நம்புகிறார்.

தற்போதைய வரவு-செலவு திட்ட விவாதம் 13ஆம் திகதி நிறைவடைகிறது. அடுத்த வருடம் ஜனவரி மாதம் 9 ஆம் திகதி நாடாளுமன்றம் மீன்றும் கூடும்.

அப்படி இல்லாது கூட்டத் தொடரை ஒத்திவைத்து மார்ச் நடுப்பகுதியில் தேர்தலை நடத்துவதற்கான திட்டம் ஒன்று அரசிடம் உள்ளது என்று அரச உள்ளக வட்டாரம் தெரிவிக்கிறது.

இந்தத் தேர்தலைத் தொடர்ந்தே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிடுகிறது என்றும் அந்தத் தகவல் மேலும் கூறுகிறது.

உண்மை என்னவென்றால்,அரசு எந்தத் தேர்தலுக்குச் சென்றாலும் வெல்லாது என்பதுதான்.மக்கள் இந்த அரசுக்கு தகுந்த பாடம் கற்பிக்கக் காத்திருக்கிறார்கள் என்பதுதான்.

மக்களிடம் வாக்கு கேட்பதற்கு இந்த அரசுக்கு என்ன தகுதி இருக்கிறது? செய்வது எல்லாமே மக்கள் விரோத செயற்பாடுகள்.அப்படி இருக்கும்போது எப்படி மக்களிடம் இவர்களால் செல்ல முடியும்? வாக்கு கேட்க முடியும்?

# புல்மோட்டையில் தொடரும் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் வாழ்வாதார உதவித்திட்டம்







(இர்ஷாத் இமாமுதீன்)

20 மீனவ பயனாளிகள் மீன்பிடி வள்ளங்களையும் உபகரணங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பிலால்நகர், சதம் நகர், பட்டிகுடா ஆகிய கிராமங்களுக்கான முன்மாதிரி கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வாழ்வாதார மேம்பாட்டு திட்டத்தின் ஒரு பகுதியாக முஸ்லிம் எய்ட் ஸ்ரீ லங்கா நிறுவனம் 20 மீனவர்களுக்கு மீன்பிடி வள்ளங்கள் மற்றும் உபகரணங்களை வியாழக்கிழமை (7) கையளிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு 2.5 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தங்கது. காலை 10.30 மணி அளவில் பட்டிகுடா, களப்பு பகுதியில் நடைபெற்ற எளிமையான நிகழ்வில் புல்மோட்டை 4 ஆம் வட்டார கிராம, பொருளாதார உத்தியோகத்தர்கள் மற்றும் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர்

ஆயுஆ. அஸ்வர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்வாதார உதவி பொருட்களை பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் முஸ்லிம் எய்ட் நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் உரையாற்றுகையில், இத்திட்டத்தை நீங்கள் வெற்றிகரமாக செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியதோடு, முஸ்லிம் எயிட் நிறுவனமும் பிரதேச செயலகமும் இத்திட்டத்தினை தொடர்ச்சியாக கண்காணிக்கும் எனவே வழங்கப்பட்ட உபகரணங்களை முறையாக பயன்படுத்தி உச்சபயனை அடைந்து கொள்ள வேண்டும் என்று வழியுருத்தினார்.

முஸ்லிம் எய்ட் நிறுவனம் வரிய குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது

சேப்வே ட்ரவல்ஸ்
டிசம்பரில் உம்றா
Departure on 18th Dec.2023

10 Days PK
எமது உம்றா குழு அல்ஹாஜ் மவ்லவி தல்ஹா (பாரி) அவர்களின் நேரடி வழிகாட்டலில் அழைத்துச்செல்லப்படும்.
மதீனாவில் 50 மீட்டர் தூரத்தில் 3 நாட்களும், மக்காவில் 200 மீட்டர் தூரத்தில் 6 நாட்களும் தங்கி அமல் செய்யும் அரிய வாய்ப்பு.
அனுபவமுள்ள உலமாவின் நேரடி வழிகாட்டல் மற்றும் சியாரா உட்பட அனைத்தும் முதற்தரம்.
நியாய கட்டணம்,நேர்த்தியான சேவை
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அழையுங்கள்:
Alhaj M.R.M. Farook J.P.
0777660637
SAFEWAY TRAVELS & TOURS (PVT) LTD. IATA
#191/20, High Level Road,Siebel Garden Kirulapone, Colombo -06

## VAT வரிக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அதிகரிக்கப்படும்.

அதேபோல்,சுகாதார சேவைகள்,தகனசாலைகள்,அடக்கஸ்தலங்கள் போன்றவற்றின் கட்டணங்களும் அதிகரிக்கப்படும்.

## கலைக்கப்படுமா...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இந்தத் தேர்தலைத் தொடர்ந்தே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிடுகிறது என்றும் அந்தத் தகவல் மேலும் கூறுகிறது.

## VAT வரி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அணி போன்றவை போராட்டத்தைத் தொடங்கியுள்ளன.

அதேபோல் அரசில் உள்ள சில அமைச்சர்களும் எம்பிக்களும் இதே கோரிக்கையை அரசிடம் முன்வைத்துள்ளனர்.

SHAMNA TEX
WHOLESALE & RETAIL DEALERS IN SHALWARS , CHOLIES CHILDREN'S WEAR, SKIRT & BLOUSE, POPLINE ETC.



புதிய மாணவர் அனுமதி - 2024
ஷரபிய்யா அரபுக்கல்லூரி - மாவனல்லை
கிதாப் மற்றும் ஹிப்ழ் பிரிவுகளுக்காக 2024ஆம் ஆண்டில் மாணவர்களை இணைத்துக் கொள்ள விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
கிதாப் பிரிவுக்கான தகைமைகள்
2024ஆம் ஆண்டில் தரம் 08இல் கல்வி கற்க வேண்டியவராக இருத்தல்
அல்குர்ஆனை பிழையின்றி ஓதத் தெரிந்தவராக இருத்தல்
கல்வியைப் பாதிக்கும் பாரிய நோய்கள் இல்லாதிருத்தல்
14 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல்
ஹிப்ழ் பிரிவுக்கான தகைமைகள்
2024ஆம் ஆண்டில் தரம் 06இல் கல்வி கற்க வேண்டியவராக இருத்தல்
அல்குர்ஆனை பிழையின்றி ஓதத் தெரிந்தவராக இருத்தல்
கல்வியைப் பாதிக்கும் பாரிய நோய்கள் இல்லாதிருத்தல்
12 வயதுக்கு மேற்படாதவராக இருத்தல்
க.பொ.த சாதாரண மற்றும் உயர் தரப் பரீட்சைகளுக்கு மாணவர்கள் தயார்படுத்தப்படுவர்
அரபு, சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பேசுவதற்கான பயிற்சி வழங்கப்படும்
நேர்முகப் பரீட்சை (இன்ஷாஅல்லாஹ்)
10.12.2023 ஞாயிற்றுக்கிழமை
கல்லூரி (வட்ஸப்) 0762308019
அதிபர் 0753635517
பிரதி அதிபர் 0775769801

# இவர்களைத் தண்டிப்பது யார்?

நாணய நிதியத்தைத் தவிர்த்து வேறு வழிகளில் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க இவர்களுக்குத் தெரியவில்லை. அப்படி நாணய நிதியத்திடம் சென்று பொருளாதார பிரச்சினை தீர்ந்தால் பரவாயில்லை.மேலும் பிரச்சினையல்லவா கூடுகிறது. நாணய நிதியத்தால் அரசின் பிரச்சினைதான் தீருகிறது. மக்களின் பிரச்சினை கூடுகிறது.



இந்த நாட்டின் பொருளாதாரம் யாரும் எதிர்பார்த்திராதவகையில் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது. மக்கள் நினைத்துப் பார்க்க முடியாதவாறு துன்பத்தில் வீழ்ந்துள்ளனர்.

இந்த நிலைமைக்கு யார் காரணம் என்று எல்லோரும் அறிவார்கள். ராஜபக்ச குடும்பமே அன்றி வேறில்லை. நீதிமன்றமும் அதை இப்போது உறுதிப்படுத்தியுள்ளது.

மஹிந்த ராஜபக்ச–பசில் ராஜபக்ச–கோத்தாபய ராஜபக்ச ஆகிய மூவரே இதற்கு காரணம் என்கிறது உயர் நீதிமன்றம்.

நீதிமன்றம் அறிவித்தாலும் அறிவிக்காவிட்டாலும் அவர்கள்தான் காரணம் என்பதை மக்கள் அறிவர்.அதன் காரணமாகவே கோத்தாவுக்கு எதிராக–மஹிந்தவுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி அவர்களை பதவியில் இருந்து கவிழ்த்தனர்.

இப்போது நீதிமன்றம் அவர்கள்தான் காரணம் என்று அறிவித்துவிட்டதால் அந்த உண்மை சட்டரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆனால்,இவர்கள் செய்த குற்றம் இலகுவானது அல்ல.முழு நாட்டையும் சிக்கலில்–வறுமையில் தள்ளியுள்ளது.

அதற்காக மக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பைக் கொடுத்தபோதிலும்,அந்தத் தீர்ப்பால் உண்மையில் மக்களின் பிரச்சினை தீரவில்லை.

ஜனாதிபதியாகவிருந்த கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டப்பட்டார். மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து விரட்டப்பட்டார்.அவ்வளவுதான்.

இவர்கள் தண்டிக்கப்படவுமில்லை மக்களின் பிரச்சினைகள் தீரவுமில்லை. கோத்தாவின் இடத்துக்கு ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வந்தார்.

அப்போதிருந்த பிரச்சினையான எரிபொருள் தட்டுப்பாட்டுக்கும் மின் வெட்டுக்கும் தீர்வை வழங்கினார்.

ஆனால்,பொருட்களின் விலைகள் குறையவே இல்லை.இப்போது பார்த்தால் பல பொருட்களின் விலைகள் கோத்தாவின் ஆட்சியில் இருந்ததை விடவும் அதிகமாகவே உள்ளன.

மின் கட்டணம் தாறுமாறாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மின் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் 5 லட்சம் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மின் கட்டணம் 3 ஆயிரம் ரூபாவைத் தாண்டினால் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது.

மக்கள் துன்பத்துக்கு மேல் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெறுவதற்காக அது விதித்த நிபந்தனைகள் அனைத்தையும் அதிகரிக்கப் போய்த்தான் மக்கள் இவ்வளவு சிக்கலுக்குள் வீழ்ந்துள்ளனர்.

அடுத்த வருடமாவது மக்களுக்கு விடிவு கிடைக்குமா என்று பார்த்தால் இப்போது இருப்பதைவிட மிக மோசமாகத்தான் அமையப் போகிறது நிலைமை.

2024 ஜனவரியில் இருந்து இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருத்தரும் மேலதிகமாக 30ஆயிரம் ரூபாவை வாரியாகச் செலுத்தவுள்ளனர்.

இதைச் சமாளிப்பதென்றால் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.வரவு–செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டு அது ஏப்ரல் மாதத்தில் இருந்துதான் வழங்கப்படும்.

இது மக்களை ஏமாற்றும் செயல். அரச ஊழியர்களோ 20 ஆயிரம் ரூபா அதிகரிப்பை கோருகிறார்கள்.துறைமுக ஊழியர்கள் அடுத்த 3 வருடங்களுக்கு 36 வீத சம்பள அதிகரிப்பைக் கோருகிறார்கள்.

ஆனால்,இவை எவையும் நடக்கப்போவதில்லை என்பதை எல்லோரும் அறிவோம்.அதற்காகப் போராட்டங்கள் நடத்தியும் வேலை இல்லை.

பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் உயருகின்றன.முதலாளிமார் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வேண்டுமென்றே பொருட்களின் விலைகளை உயர்த்துவது ஒரு பக்கம். அரசின் இயலாமையால் விலைகள் உயர்வது இன்னொரு பக்கம்.

எல்லாமே இறுதியில் மக்களின் கழுத்தைத்தான் நெருக்குகின்றன. மக்கள் வாழ வேண்டும் என்பதை விட அரசு வாழ வேண்டும் என்பதுதான் இந்த ஆட்சியாளர்களுக்கு முக்கியமாகத் தெரிகிறது.

அரசின் அணைத்து நடவடிக்கைகளும் அரசைக் காப்பாற்றுவதாகவே உள்ளது. மக்களைக் காப்பாற்றுவதாக இல்லை.

மின் கட்டண அதிகரிப்பு என்பது மக்களை எந்தளவு நெருக்குகிறது என்பதை நாம் அறிவோம். ஆனால்,அதைப்பற்றியெல்லாம் கணக்கில் எடுக்காது அரசு நட்டமடையாதவாறே நடவடிக்கை எடுத்து வருகிறது.

மக்களுக்கு எதுவித நிவாரணமும் இல்லை.அரசு மட்டும் நஷ்டத்தில் இயங்கக்கூடாது.இதுதான் அரசின் நிலைப்பாடு.

மேலும் இப்போது மக்கள்மீது சுமத்தப்பட்டுள்ள வரிகளும் அடுத்த வருடம் அதிகரிக்கப்படவுள்ள வரிகளும் மக்களை இறுக்கி அரசைப் பாதுகாக்கும் திட்டம்தான்.

இந்த நிலை இப்படியே இன்னும் சில காலம் தொடர்ந்தால் இலங்கை சோமாலியாவைவிட மோசமானதாக அமையும்.வறுமை மேலும் அதிகரிக்கும். பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும். தொழில் வாய்ப்புகள் மேலும் இழக்கப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை நிதியைப் பெறுவதற்காக நிதியத்தின் அடுத்த நிபந்தனைகளுக்கு உடன்பட்டே ஆக வேண்டும் என்கிறது அரசு.

முதலாம் தவணை நிதியைப் பெறுவதற்காக நிதியம் விதித்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தப் போய்த்தான் இவ்வளவு சிக்கல் மக்களுக்கு. மேலும் நிபந்தனைகளை நிறைவேற்றப் போனால் நிலைமை மேலும் மோசமாகும்.

நாணய நிதியத்தைத் தவிர்த்து வேறு வழிகளில் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க இவர்களுக்குத் தெரியவில்லை.

அப்படி நாணய நிதியத்திடம் சென்று பொருளாதார பிரச்சினை தீர்ந்தால் பரவாயில்லை.மேலும் பிரச்சினையல்லவா கூடுகிறது.

நாணய நிதியத்தால் அரசின் பிரச்சினைதான் தீருகிறது.மக்களின் பிரச்சினை கூடுகிறது.

இந்தப் பிரச்சினைகள் அனைத்துக்கும் காரணம் அந்த ராஜபக்ஸ சகோதரர்கள்தான்.இவர்களுக்கு என்ன தண்டனை? யார் தண்டனை கொடுப்பது?

# திரும்பிக்கூட பார்க்கவில்லை



ரொஷான் ரணசிங்க அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கப்பட்டது நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதே

இதற்கு முன் கூட்டம் நடக்கும்போது அமைச்சர்கள் யாரும் நீக்கப்பட்டதில்லை.அப்படி நடந்தது இதுதான் முதல் தடவை.

அந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ரொஸானும் கலந்துகொண்டிருந்தார்.அங்கு ஜனாதிபதிக்கும் ரோஸ ானுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் காதில் ஏதோ சொல்ல அதனைத் தொடர்ந்து ரோஸானை அமைச்சுப் பதவியில் இருந்து விலக்குவதாக அறிவித்தார் ஜனாதிபதி.

அப்போது அங்கிருந்த சக அமைச்சர்கள் எவரும் எதுவும் பேசவில்லை.

ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்ததும் ரொஷான் அங்கிருந்து எழுந்து சென்றார்.

அவர் அப்படிச் செல்லும்போது அங்கிருந்த அமைச்சர்கள் எவரும் ரோஷனின் முகத்தைப் பார்க்கவில்லை.

நமக்கு எதுக்கு வம்பு என்று நினைத்து ஒதுங்கி இருப்பார்கள்போலும்...

# சஜித்தால் புலம்பும் எம்பிக்கள்...

வரவு-செலவுத் திட்ட விவாதம் என்பது எதிர்கட்சிக்கு உரியது. அதனால் எதிர்க்கட்சி எம்பிக்கள் அனைவருக்கும் உரையாற்றுவதற்கு நேரம் வழங்கப்பட வேண்டும்.

அந்த நேரத்தைப் பிரித்துக் கொடுப்பது எதிர்கட்சிதான். ஆனால்,இதில் அதிகமான நேரத்தை எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவே எடுத்துக்கொள்கிறாராம்.

இதனால் தாம் உரையாற்றுவதற்கு நேரம் கிடைப்பதில்லை.என்று அக்கட்சி எம்பிக்கள் சிலர் அரச தரப்பு எம்பிக்களிடம் சொல்லி புலம்புகிறார்களாம்.








# போட்டுக் கொடுத்த அமைச்சர்கள்

ரொஷான் ரணசிங்கவை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கிய பின் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் கலந்துவிட்டு நாடாளுமன்றம் சென்றார் ஜனாதிபதி.

அப்போது வழமைபோல் அவரை சூழ்ந்துகொண்டார்கள் சில அமைச்சர்கள்.

“சேர்..ரொஷான் அமைச்சராக இருக்கும்போது நிறைய தடவ உங்களுக்கு ஏசி இருக்கார்.அந்தக் குற்றச்சாட்ட ஏன் நீங்க முன்வைக்கல்ல...?“ என்று ஜனாதிபதியிடம் கேட்டார்கள் அந்த அமைச்சர்கள்.

“என்ன யாரும் விமர்சிக்கலாம்.அது பிரச்சின இல்ல.ஆனால்,ரொஷான் கிரிக்கட் விசயத்துல செய்தது பிழை.அதுதான் அவர நீக்கின...“ என்றார் ஜனாதிபதி.

“சேர்...ரொஷான் இத தனிய செய்யல்ல.இதுக்கு பின்னால வேற ஆட்கள் இருக்காங்க “ என்றார் ஆசுமாரசிங்க...

# ஊடகவியலாளர்களுடன் சாப்பிட பிரதமர்

வரவு-செலவுத் திட்டத்தின் பொது நிர்வாக. உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்களுக்கான விவாதம் இடம்பெற்ற அன்றைய தினம் பிரதமர் தினேஷ் குணவர்தன கடும் பிசி.

காரணம் அந்த அமைச்சுக்கள் இருப்பது பிரதமரின் கீழ்.

அன்றைய தினம் பகல் உணவை அவர் நாடாளுமன்ற ஊடகவியலாளர்களுடன் சேர்ந்து எடுத்துக் கொண்டார்.

அங்கு பல விடயங்களை அவர் அவர்களுடன் பகிர்ந்துகொண்டார்.

கூடவே இராஜாங்க அமைச்சர்கள் ஜானக வகும்புர,அசோக பிரியந்த,நாடாளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்தன ஆகியோரும் உடன் இருந்தனர்.





# மூன்றாவது தடவையில் வெற்றி

பதில் பொலிஸ்மா அதிபராக சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டுள்ளார் அல்லவா.

அன்றைய தினம் பொலிஸ் அமைச்சர் டிரான் அலஸ் தென்னகோனை அழைத்துக்கொண்டு ஜனாதிபதியிடம் சென்றார்.

பொலிஸ்மா அதிபர் பதவியை மூன்று வருடங்களுக்கு கட்டுப்படுத்துவதற்கு அமைச்சரவைக்கு யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று அப்போது ஜனாதிபதி தென்னகோனிடம் கூறினார்.

கூறிவிட்டு மூன்று மாதங்களுக்கு தென்னகோனை பதில் பொலிஸ்மா அதிபராக நியமிக்கும் நியமனக் கடிதத்தை வழங்கினார்.

இதற்காக தென்னகோன் மூன்று தடவைகள் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளாராம்.மூன்றாவது தடவை வெற்றி.



# தாயின் நலன் விசாரித்த மஹிந்த

சில நாட்களுக்கு முன் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் மஹிந்த ராஜபக்சவும் சஜித் பிரேமதாசாவும் சந்தித்துக்கொண்டனர்.

லிப்ட் ஊடாக சபைக்குள் செல்வதற்காக மஹிந்தவும் எம்பிக்கள் சிலரும் இரண்டாவது மாடியில் காத்துக்கொண்டு நின்றனர்.

அப்போது அங்கு வந்தார் சஜித்..

““ சஜித் எப்படி..சுகமா..?““ என்று கேட்டார் மஹிந்த..

““ பரவாயில்ல ..முன்னாள் ஜனாதிபதி அவர்களே..““ என்று பதில் வழங்கினார் சஜித்.

““ அம்மா எப்படி ,,நல்லா இருக்காங்களா.. அவங்கள ரொம்ப கேட்டதாக சொல்லுங்க..““ என்றார் மஹிந்த.

““ அவங்க நல்லா இருக்காங்க..நிச்சயம் நீங்க விசாரிச்சதாக சொல்கிறேன்““ என்றார் சஜித்.



# பிரிட்டிஷ் கவுன்சிலிடமிருந்து புலமைப்பரிசில் அன்பளிப்பு




நாடு முழுவதிலுமிருந்து IELTS பரீட்சைக்கு தோற்றி சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆறு மாணவர்களுக்கு, தமது தெரிவுக்குரிய பல்கலைக்கழக கல்வியை தொடர்வதற்கான புலமைப்பரிசிலை வழங்கியுள்ளது.

நவம்பர் 27ஆம் திகதி கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தில் நடைபெற்ற IELTS பரிசில் வழங்கும் நிகழ்வின் போது இந்த புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருந்தது.

உலகளாவிய ரீதியில் ஆங்கிலத்தில் கற்கைகள் நடைபெறும் பல்கலைக்கழகங்களில் தமது கற்கைகளை தொடர்வதற்கான கட்டணங்களில் 5000 ஸ்ரேளிங் பவுண்களை தமது உயர் கற்கைகளை தொடர்வதற்கு பிரிட்டிஷ் கவுன்சில் வாய்ப்பளித்திருந்தது.

இதனூடாக, இளம் மாணவர்களுக்கு தமது கல்விசார் கனவுகளை நனவாக்கிக் கொள்வதற்கான உதவிகளை வழங்கியிருந் தது.

2023 முதல் 2024 மார்ச் மாதம் வரையில் தமது பட்டப்படிப்பு அல்லது பட்டப்பின்படிப்பு கற்கைகளை உள்நாட்டில் அல்லது வெளிநாடுகளில் தொடர்வதற்காக IELTS பரீட்சையினூடாக விண்ணப்பித்திருந்த மாணவர்களுக்கு இந்த வருடாந்த போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

இலங்கை, சீனா, ஜப்பான், ஹொங் கொங், இந்தோனேசியா, கொரியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்வான், தாய்லாந்து, வியட்நாம், பங்களாதேஷ், பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் வதியும் IELTS பரீட்சைக்கு தோற்றுவோருக்கு இந்தப் போட்டியில் பங்கேற்க முடியும்.

கடுமையான விண்ணப்பத் தெரிவு அடிப்படையில், இலங்கையிலிருந்து தெரிவாகிய ஆறு வெற்றியாளர்களுக்கு உயர் பணப் பரிசு வழங்கப்பட்டிருந்தது:

1ஆம் பரிசு – சுஹாஷி தல்கஸ்பிட்டிய
2ஆம் பரிசு – திலீப கமகே
2ஆம் பரிசு – ரவீஷ விக்ரமசிங்க
3ஆம் பரிசு – குஷாதினி மல்லவாரச்சி
3ஆம் பரிசு – மொஹமட் ரஸ்லான்
3ஆம் பரிசு – பென்ஜமின் தர்மரட்னம்

# பெண்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் செரண்டிப்

2023 நவம்பர் 06: செரண்டிப் மா ஆலை அண்மையில் பெண்களுக்கு வலுவூட்டுதல் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் என்பவற்றை மையமாகக் கொண்ட வெற்றிகரமான பயிற்சி மற்றும் கல்வித் திட்டமொன்றை பதுளை மாவட்டத்தில் நடாத்தியது.

கட்டமைக்கப்பட்ட இந்த வேலைத்திட்டங்கள் பதுளை, எல்ல, வெலிமடை ஆகிய பிரதேசங்களில் ஒவ்வொரு பிரதேசத்தினதும் தனித்துவமான தேவைகளுக்கு ஏற்றவாறு முன்னெடுக்கப்பட்டன.

பல வாரங்களாக, செரண்டிப் மா ஆலையானது உள்ளூர் பெண்களுக்கு கோதுமை மாவின் அடிப்படைகள், வெதுப்பகக் கலை போன்ற அடிப்படை விடயங்களை உள்ளடக்கிய பயிற்சியை வழங்கியது.

இப் பயிற்சியில் கோதுமை மா பற்றிய அறிமுகம், மூலப்பொருட்கள் மற்றும் இதர பதார்த்தங்கள் பற்றிய அடிப்படை அறிவு, வெதுப்பக முறைகள், நடைமுறை அனுபவங்கள், மற்றும் "செரண்டிப் செவன் ஸ்டார்" உற்பத்திகளின் தரத்திற்கு முக்கியத்துவம் என்பன உள்ளடங்கியிருந்தன.

செரண்டிப் மா ஆலையானது தன் நோக்கத்தை போஷாக்கிற்கு அப்பாலும் விரிவுபடுத்த உறுதி பூண்டுள்ளது, அதனால் பெண்களின் வாழ்வில் உறுதியான மாற்றத்தை ஏற்படுத்தி, தாக்கமொன்றை உருவாக்கக்கூடிய சமூகத்தை வளப்படுத்துவதற்கு உதவுகிறது.





# ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸின் புதிய சேவை

இலங்கையில் சுகாதாரப் பராமரிப்புத் துறைக்கு மீள் வரைவிலக்கணம் வகுக்கும் வகையில், நோயாளர்கள் அதிநவீன சத்திர சிகிச்சைகளின் பின்னர், அதே நாளில் வீடு திரும்பி, விரைவாக, சிறப்பாக மற்றும் மிகுந்த சௌகரியத்துடன் குணமடைவதற்கு இடமளிக்கும் முறையை ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன் புதிய முயற்சியான ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் வழங்கும் சத்திர சிகிச்சையை முடித்து அதே நாளில் வீடு திரும்பும் வசதியுடன் (Hemas Ambulatory Surgical Care) அதிசிறந்த சத்திர சிகிச்சை தொழில்நுட்பங்கள் மூலமாக தற்போது இவ்வசதி கிடைக்கின்றது.

முதல்முறையாக கிடைக்கின்ற இச்சேவை, சத்திர சிகிச்சை நடைமுறைகளில் இலங்கை மக்களின் அனுபவங்களை மாற்றியமைத்து, கூடுதல் சௌகரியம், செலவுச் சிக்கனம் மற்றும் மிக முக்கியமாக தனித்துவமான வகையில் நோயாளரை மையப்படுத்திய அணுகுமுறையை வழங்குகின்றது.

இது தொடர்பில் ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் மற்றும் ஆய்வுகூடங்கள் சங்கிலியின் முகாமைத்துவப் பணிப்பாளரான கலாநிதி லகித் பீரிஸ் அவர்கள் கருத்து வெளியிடுகையில், "நிபுணத்துவம் வாய்ந்த வீட்டுப் பராமரிப்பு மருத்துவ அணியின் உதவியுடன், பழக்கமான சூழலில், நோயாளர்கள் தங்கள் வீட்டின் சௌகரியத்துடன் விரைவாக குணமடைவதாக அறியப்படுகிறது.

ஹேமாஸ் ஹொஸ்பிட்டல்ஸ் வழங்கும் சத்திர சிகிச்சையை முடித்து அதே நாளில் வீடு திரும்பும் வசதியுடன், சிறிய சத்திர சிகிச்சைகள் முதல் மேம்பட்ட சத்திர சிகிச்சைகள் வரை, இரவில் மருத்துவமனையில் தங்கியிருக்க வேண்டிய அவசியமின்றி நோயாளிகள் பரந்த அளவிலான சத்திர சிகிச்சை நடைமுறைகளை மேற்கொள்ள உதவுகிறது. என்று குறிப்பிட்டார்.

# செயலாக்க அறிக்கை வெளியீடு

TikTok 2023 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டு (2023 ஏப்ரல்–ஜூன்) சமூக வழிகாட்டுதல்கள் செயலாக்க அறிக்கையை வெளியிட்டுள்ளது.

தவறான தகவல்களுக்கு எதிரான போராட்டம் மற்றும் பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய இடத்தை உருவாக்குவதற்கான தனது உறுதிப்பாட்டை மேலும் உறுதிப்படுத்துகிறது.

வுமைவுழம தனது பாவனையாளர்களின் நம்பிக்கையைப் பெறவும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் தொடர்ந்து பாடுபடுகிறது என்பதை இந்த அறிக்கை காட்டுகிறது. தனது சமூக வழிகாட்டுதல்களை மீறும் உள்ளடக்கத்தை அகற்றவும், தவறான தகவல்களின் பரவலைத் தடுக்கவும் வுமைவுழம தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

2023 இரண்டாவது காலாண்டில் (ஏப்ரல்–ஜூன்) உலகளவில் 106,476,032 வீடியோக்கள் அகற்றப்பட்டன.

இது வுமைவுழமஇல் பதிவேற்றப்பட்ட மொத்த வீடியோக்களில் 0.7% ஆகும்.

இவற்றில், 66,440,775 வீடியோக்கள் தானியக்க முறைகள் மூலம் அகற்றப்பட்டன, அதே நேரத்தில் 6,750,002 வீடியோக்கள் மறுபரிசீலனைக்குப் பிறகு மீண்டும் சேர்க்கப்பட்டன.

சமூக வழிகாட்டுதல்கள் மீறல்களை கையாள்வதற்கு இணையாக, TikTok தீவிரமாக Spam கணக்குகளை இலக்காகக் கொண்டு, தொடர்புடைய உள்ளடக்கத்தையும் கையாண்டது. தானியங்கி Spam கணக்குகளை உருவாக்குவதைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்தது.



# பசுமை ஐதரசன் கலப்புத் திட்டம்

அதானி குழுமத்தால் இணைந்து ஊக்குவிக்கப்படும் முன்னணி வலுசக்தி மற்றும் நகர எரிவாயு விநியோக நிறுவனமான Adani Total Gas Ltd. (ATGL) மற்றும் TotalEnergies ஆகியன, ஒரு முன்னோடியான "பசுமை ஐதரசன் கலப்பு முன்னோட்ட திட்டத்தை" ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, குஜராத்தின் அஹமதாபாத்தில் 4,000 இற்கும் மேற்பட்ட குடியிருப்பு மற்றும் வணிக வாடிக்கையாளர்களுக்கு பசுமை ஐதரசனை (GH2) இயற்கை எரிவாயுவுடன் கலப்பதற்கான சமீபத்திய தொழில்நுட்பங்களை ATGL பயன்படுத்தும்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலம் உருவாக்கப்பட்ட மின்சாரத்துடன், நீரின் மின்பகுப்பைப் பயன்படுத்தி GH2 உற்பத்தி செய்யப்படுகிறது. ஐதரசன் கலவையானது எரிவாயுவை விட குறைந்த காபன் வெளியீட்டை கொண்டதோடு, அதே வெப்பத்தை வழங்கும் திறனைக் கொண்டுள்ளது.

20224-2025 நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்த திட்டம் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் ஒழுங்குபடுத்தல் அனுமதிகளைப் பொறுத்து பசுமை ஐதரசனின் சதவீதம் படிப்படியாக 8% அல்லது அதற்கும் அதிகமாக அதிகரிக்கப்படும்.

இந்த முன்னோட்டத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர், படிப்படியாக நகரத்தின் எல்லாப் பகுதிகளுக்கும்; AGTL இன் அனுமதிப்பத்திரம் பெற்ற ஏனைய பகுதிகளுக்கும் ஐதரசன் கலந்த எரிபொருள் வழங்கப்படும். ஆய்வுகளின்படி, 8% வரையிலான ஐதரசன் கலவையானது காபன் வெளியீட்டை 4% வரை குறைக்கும்.

# உலக வங்கி தினத்தை கொண்டாடும் மக்கள் வங்கி



மக்கள் வங்கி, சர்வதேச வங்கி தினத்தை கொண்டாடுகிறது. சர்வதேச வங்கிகள் தினம் என்பது நமது அன்றாட வாழ்வில் வங்கிகளின் முக்கிய பங்கை அங்கீகரிக்கும் ஒரு உலகளாவிய அனுட்டிப்பு நிகழ்வாகும்.

ஆண்டுதோறும் நடத்தப்படும், இந்த தினம் நமது நிதியியல் கட்டமைப்புகளின் முதுகெலும்பாக இருக்கும் ஸ்தாபனங்களுக்கு கௌரவம் செலுத்துகிறது.

பொருளாதார வளர்ச்சிக்கு அனுசரணையளிப்பது, சேமிப்பை வளர்ப்பது மற்றும் உலகளாவில் தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு அத்தியாவசிய நிதிச் சேவைகளை வழங்குவதில் வங்கிகளின் முக்கியத்துவத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

14.7 மில்லியனுக்கும் அதிகமான வாடிக்கையாளர் தளம் மற்றும் ரூபா. 3 டிரில்லியனுக்கும் அதிகமான திரட்டிய சொத்துக்களுடன், மக்கள் வங்கி இலங்கை முழுவதும் வங்கிச்சேவையை வெகுசனங்கள் மத்தியில் எடுத்துச்செல்வதில் முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது.

வளர்ச்சிக்கான முன்னேற்றத்தைத் தழுவி, தொலைதூர பின்தங்கிய பிரதேசங்களிலும் கூட அதிநவீன டிஜிட்டல் சேவைகளை வங்கி விரிவுபடுத்துகிறது.

# ஸ்டார்ட்-அப்-சைக்கிள் செயல் விளக்க தினம் நிறைவு



ஜோன் கீல்ஸ் குழுமத்தின் சமூக தொழில் முனைவோர் திட்டமான பிளாஸ்டிக்சைக்கிள், அதன் தொடக்க ஸ்டார்ட்-அப்-சைக்கிளை, 28 நவம்பர் 2023 அன்று செயல் விளக்க தினத்துடன் நிறைவு செய்தது.

"ஸ்டார்ட்-அப்-சைக்கிள்" என்பது பிளாஸ்டிக்சைக்கிளின் சவால் விடுக்கும் தளமாகும். இது குழுமத்தின் செயல்பாடுகளை விரைவுபடுத்தும் ஜோன் கீல்ஸ் எக்ஸ் மற்றும் குழுமத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறை மற்றும் புத்தாக்கப் பிரிவான ஜோன் கீல்ஸ் ரிசர்ச் ஆகியவற்றுடன் இணைந்து புதுமையான மற்றும் செயல்படுத்தக்கூடிய நீண்ட கால தீர்வுகள் மூலம் பிளாஸ்டிக் பயன்பாடு மற்றும் கழிவு சவால்களை எதிர்கொள்ள இலங்கை தொழில்முனைவோர் மற்றும் கண்டுபிடிப்பாளர்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

செப்டம்பர் 2023 இறுதிக்குள் 100க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், ஓய்வு, நுகர்வோர் உணவுகள் மற்றும் சில்லறை விற்பனையில் உள்ள ஜோன் கீல்ஸ் குழும வணிகங்களின் தீர்வு வழங்குநர்கள் மற்றும் பிரச்சனைகளை அறிக்கை யிடுபவர்களுக்கும் இடையே ஒரு திறந்த நாள் ஏற்பாடு செய்யப்பட்டது.

2023 அக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட ஆறு வார வேலைத்திட்டமானது, விண்ணப்பதாரர்களுக்கு குறைந்தபட்ச சாத்தியமான தயாரிப்புகள், அறிவுசார் சொத்து, நிதி மேலாண்மை மற்றும் சட்டமன்ற செயல்முறைகள் போன்ற அத்தியாவசியத் துறைகளில் ஜோன் கீல்ஸ் குழுமக் குழு உறுப்பினர்களுடன் தங்கள் திறமைகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கியது.

# இப் பருவ காலத்தை ஆர்ப்பிக்கோவுடன் அனுபவித்திடுங்கள்




கிறிஸ்மஸ் பண்டிகைக்குத் தேவையான அனைத்தையும் நாடு முழுவதிலும் உள்ள 57 ஆர்ப்பிக்கோ சுப்பர்சென்டர்கள், சுப்பர்ஸ்டோர்ஸ் மற்றும் டெய்லி சுப்பமார்க்கட் காட்சியறைகளின் ஊடாக உற்சாகமான வாராந்த வெகுமதிகளுடன் பெற்றக்கொள்ளக் கூடிய மிகவும் எதிர்பார்ப்பு நிறைந்த 'ஆர்ப்பிக்கோவுடன் பண்டிகைக் காலத்தை அனுபவித்திடுங்கள்' என்ற பிரசாரத்தை அறிவிப்பதில் ஆர்ப்பிக்கோ பெருமையடைகிறது.

வீட்டுப் பொருட்களுக்கான தரம் மற்றும் சௌகரியத்துக்கு ஒத்த பெயரைக் கொண்டு, பெறுமதி மிக்க அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பரந்துபட்ட தேவைகளை ஆர்ப்பிக்கோ பூர்த்திசெய்துவருகிறது. நாளாந்த அத்தியாவசியப் பொருட்கள், வேகமாக நகரும் அத்தியாவசியப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள், தளபாடங்கள், மெத்தைகள், இரப்பர் உற்பத்திகள், நீர் தாங்கிகள், இலத்திரனியல் பொருட்கள், உடனடித் தயாரிப்புக்கள், பரிசுகள், பரிசுக் கூப்பன்கள், பரிசுப் பொதிகள் போன்ற பாரிய பொருட்களை ஆர்ப்பிக்கோள வழங்கி வருகிறது.

அது மாத்திரமன்றி கிறஸ்மஸ் கொண்டாட்டத்துக்கான அனைத்துப் பொருட்களையும் ஒரே இடத்தில் கொள்வனவு செய்ய முடிவதுடன், இணையற்ற விலைக் கழிவுகள் 2024 ஜனவரி 15ஆம் திகதி மாத்திரமே காணப்படும்.

கிறிஸ்மஸ் அலங்காரங்களுக்குப் பரந்துபட்ட தெரிவுகளை ஆர்ப்பிக்கோ வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் தமது அலங்காரத் தேவைகளை ஒரே கூரையின் கீழ் பூர்த்திசெய்துகொள்ள முடியும்.




# பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள்

DFCC வங்கியின் பெண்களை மையமாகக் கொண்டு அவர்களுக்கு வலுவூட்டுகின்ற வங்கிச்சேவை முன்மொழிவான DFCC ஆலோகா, மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட WCIC Prathibhabhisheka - பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள் 2023 நிகழ்வுக்கான டயமன்ட் அனுசரணையாளராக முக்கிய ஸ்தானத்தை வகிக்கவுள்ளது.

அதன்படி,இந்நிகழ்வு 2023, 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறவுள்ளதுடன், விருது வழங்கும் வைபவம் 2024 பெப்ரவரியில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் சார்க் பிராந்தியத்திலுள்ள பெண் தொழில்முயற்சியாளர்களின் மகத்தான சாதனைகளை அங்கீகரித்து, கௌரவிக்கும் நிகழ்வாக இது அமையும்.

நிதியியல் வலுவூட்டல் மற்றும் அரவணைப்பு ஆகியவற்றில் வங்கியின் அர்ப்பணிப்பை இது அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

வங்கிச்சேவையை வழங்குவதற்கும் அப்பால் சென்று, DFCC ஆலோக இலங்கையில் பெண்களுக்கு சாதகமான மாற்றத்திற்கான உந்துசக்தியாக திகழ்வதுடன், அணுகக்கூடிய மற்றும் புத்தாக்கமான நிதி மற்றும் நிதி அல்லாத தீர்வுகளை வழங்குகிறது.

# அமானா சிறந்த காலாண்டு நிதிப்பெறுபேறு





அமானா வங்கி பிஎல்சி, இதுவரை காலத்தில் பதிவு செய்திருந்த சிறந்த காலாண்டு நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்து, 2023 ஆம் ஆண்டில் உறுதியான இலாபகரத் தன்மையை வெளிப்படுத்தியிருந்தது.

2023 செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த முதல் ஒன்பது மாத காலப்பகுதியில், வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 1.68 பில்லியன் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ. 940.0 மில்லியன் ரூபாயுடன் ஒப்பிடுகையில் 78% வருடாந்த நிதியளிப்பு வருமான அதிகரிப்பாகும்.

மூன்றாம் காலாண்டில் மாத்திரம் வங்கி இதுவரை பதிவாகியிருந்த உயர் காலாண்டு வரிக்கு முந்திய இலாபமாக ரூ. 874.0 மில்லியனை பதிவு செய்திருந்தது. 2022ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் பதிவாகியிருந்த ரூ. 383.0 மில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 128மூ வளர்ச்சியாகும்.

சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகள், கூட்டாண்மை மற்றும் சில்லறை வர்த்தக துறைகளுக்கு வங்கியினால் தொடர்ச்சியாக வழங்கப்பட்ட ஆதரவு மற்றும் நாட்டில் பொருளாதார மீட்சி பதிவாகியிருந்த முக்கிய காலகட்டத்தில் பொருளாதாரத்துக்கு பெறுமதி சேர்க்கும் வகையில் செயலாற்றியிருந்ததன் பெறுபேறாக இந்த உயர் பெறுமதியை வங்கி பதிவு செய்திருந்தது.

65% வரிக் கொடுப்பனவை வங்கி மொத்தமாக பதிவு செய்திருந்த நிலையில், 9 மாத வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 891.5 மில்லியனை வங்கி எய்தியிருந்தது.

கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ. 600.5 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 48% அதிகரிப்பாகும். வங்கியின் மூன்றாம் காலாண்டு வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 238.5 மில்லியனிலிருந்து ரூ. 471.9 மில்லியனாக 98மூ வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. இந்த சிறந்த பெறுபேற்றின் காரணமாக, வங்கியின் பங்கின் மீதான வருமதி 2023 மூன்றாம் காலாண்டில் 8% ஐ கடந்திருந்தது. 2022 நிதியாண்டில் இந்தப் பெறுமதி 5.6% ஆக பதிவாகியிருந்தது.



# சன்ஷைனிற்கு விற்பனை சம்பியன் விருது

2023 SLIM National Sales Awards (NSA) நிகழ்வில் 02 தங்க விருதுகள், 06 வெள்ளி விருதுகள், 04 வெண்கல விருதுகள் மற்றும் 01 மெரிட் விருதுகளை வென்றதன் மூலம், இலங்கையில் உள்ள பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களின் குழுவான Sunshine Holdings, தனது விற்பனைக் குழுக்களின் 13 உறுப்பினர்களை அண்மையில் அங்கீகரித்துள்ளது.

குறிப்பாக போட்டி நிறைந்த இந்த வணிகச் சூழலில், விற்பனை செயல்முறை மிக முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளது மற்றும் எந்தவொரு வணிகத்தின் வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு இது முற்றிலும் முக்கியமானது.

தயாரிப்புகளுக்கும் நுவர்வோர்களுக்கும் இடையே உறவை ஏற்படுத்தும் பாலமாக அவை செயல்படுகின்றதுடன், இலச்சினைத் தூதுவர்கள் வாடிக்கையாளர் உறவுகளின் பாதுகாவலர்களாகவும் வணிகங்களின் வளர்ச்சி இயக்கிகளாகவும் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

குறிப்பாக கடந்த இரண்டு வருடங்களில், விற்பனைக் குழுக்களின் விதிவிலக்கான முயற்சிகள் கடுமையான பொருளாதாரப் நிலைமைகளுக்கு மத்தியிலும் இலங்கை நிறுவனங்களை முன்னோக்கி நகர்த்துவதற்கு உதவியுள்ளன.

இத்தகைய சூழல் Sunshine Consumer Lanka மற்றும் Sunshine Healthcare Lanka (மருந்தகம் மற்றும் மருத்துவ சாதனங்கள்) விற்பனைக் குழுக்களின் உறுப்பினர்களின் அர்ப்பணிப்பு மற்றும் ஒத்துழைத்து செயற்படும் தன்மைக்கு ஒரு சான்றாகும்.

# Mercedes-Benz விற்பனைக்கு பிந்திய சேவையின் சிறப்புக்கான மாலை நிகழ்வு



Mercedes-Benz இன் இல்லமான DIMO ஆனது, The Mercedes-Benz StarDiscovery+ எனும் பிரத்தியேக மாலை நேர நிகழ்வொன்றை அண்மையில் நடத்தியிருந்தது.

DIMO நிறுவனத்தின் Mercedes-Benz வாடிக்கையாளர்களுக்கு, அதன் மூன்று திசையில் நோக்கிய "நட்சத்திர" சின்னத்திற்கு பின்னால் உள்ள மர்மங்களை, இந்நிகழ்வில் DIMO வெளிக்கொண்டு வந்திருந்தது.

Mercedes-Benz AG பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்கள் தலைமையிலான StarDiscovery+ குழுவினர், அந்தந்த மாதிரிகளுக்கான குறிப்பிட்ட தொழில்நுட்ப ஆலோசனைப் பயணத்தில் பங்கேற்பாளர்களை அழைத்துச் சென்றனர்.

இந்த ஒப்பிட முடியாத "நட்சத்திரங்களுக்கு" சேவை செய்தல் மற்றும் பராமரித்தல் கலை தொடர்பில், உதவிக்குறிப்புகள் மற்றும் நுண்ணறிவுகளை நிபுணர்கள் விருந்தினர்களுக்கு வழங்கினர். இதன் மூலம், Mercedes-Benz இன் இல்லமான DIMO வழங்கும், Mercedes-Benz விற்பனைக்கு பின்னரான அனுபவ உலகிற்குள் அவர்கள் மூழ்கினர்.

இந்தப் பண்டிகைக்காலத்தில் ஆர்ப்பிக்கோ வழங்கும் கொண்டாட்டகால பரிசுப்பொதிகளுக்கு சந்தையில் நல்ல வரவேற்புக் காணப்படுகிறது. வாடிக்கையாளர்கள் 10 வகையான ஈர்க்கக்கூடிய தெரிவுகளில் தமக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றன.

# Uber Nawa Gamanak அறிமுகம்



தனது தளத்திலுள்ள நான்கு சக்கர மோட்டார் வாகன ஓட்டுநர்களுக்கான அனுபவத்தை மேம்படுத்தும் முயற்சியில், 'Nawa Gamanak' என்ற புதிய முயற்சியை Uber அறிமுகப்படுத்தியுள்ளது.

செயலியில் பல்வேறு புதிய அம்சங்கள் மற்றும் ஓட்டுனர் நம்பிக்கை அங்கத்துவத் திட்டத்தை இதன் மூலமாக அறிமுகப்படுத்துகிறது.

புதிய அம்சங்கள் ஓட்டுநர்களுக்கான வருமான வாய்ப்புகளை விரிவுபடுத்துவதோடு, ஒவ்வொரு முறையும் ருடிநச இல் வாகனம் ஓட்டும்போது அவர்களுக்கு கூடுதல் தெரிவு மற்றும் வெளிப்படைத்தன்மையை வழங்கும்.

அதிக தேவை உள்ள காலங்களில் ஒரே நேரத்தில் பல கோரிக்கைகளுக்கான அணுகலைப் பெறுவதோடு, பயணக் கோரிக்கையைப் பெறும்போது, ஓட்டுநர்கள் தாம் எதிர்பார்க்கும் வருவாயை இப்போது அறிந்து கொள்ள முடியும்.

யேறய புயஅயயெம இன் கீழ், நிறுவனம் ஓட்டுநர்களுக்கான விசேட நம்பிக்கை அங்கத்துவத் திட்டத்தையும் இது அறிமுகப்படுத்தியுள்ளது. Uber Pro என்ற பெயரில் நிறுவனம் அதிகளவில் நிறைவு செய்யப்பட்ட பயணங்களுடன் சிறந்த தரமதிப்பீடு பெற்ற தனது ஓட்டுநர்களுக்கு வெகுமதி அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

சிறப்பான வாடிக்கையாளர் மதிப்பீடுகள் (4.8 க்கு மேல்) மற்றும் அதிக பயண நிறைவு வீதம் கொண்ட ஓட்டுநர்கள் விசேட பண வெகுமதிகளையும் பிரத்தியேக சலுகைகளையும் பெறுவார்கள்.

மேம்படுத்தப்பட்ட ஆதரவு மற்றும் வாகன பராமரிப்பு மற்றும் காப்புறுதி மீதான தள்ளுபடிகள் தவிர, தெரிவு செய்வதற்கான கூடுதல் விருப்பங்களைப் பெறுவதன் மூலம், வீதியிலும் வெளியேயும் ஓட்டுநர்கள் தங்கள் இலக்குகளை அடைய உதவும் வகையில் யேறய புயஅயயெம வடிவமைக்கப்பட்டுள்ளது.

# வத்தளையில் HNB FINANCE



தனது வாடிக்கையாளர்களுக்கு அதிக வசதிகளுடன் நிதிச் சேவைகளை வழங்கும் நோக்கத்துடன் HNB FINANCE PLC தனது புதிய கிளையை வத்தளையில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.

இது இல. 420 வத்தளை, கொழும்பு நீர்கொழும்பு பிரதான வீதியில் அமைந்துள்ளது.

HNB FINANCE PLC வழங்கும் அனைத்து நிதிச் சேவைகளும் வத்தளை கிளையில் கிடைக்கின்றன.

மேலும் இந்த சேவைகளில் லீசிங், சேமிப்பு, நிலையான வைப்பு, வணிகக் கடன், வீட்டுக் கடன் மற்றும் தொழில்துறையில் மிகவும் பிரபலமான தங்கக் கடன் சேவை ஆகியவை அடங்கும்.

வத்தளை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் தங்கக் கடனுக்கான பெரும் தேவை இருப்பதால், HNB FINANCE வத்தளை கிளையில் புதிய தங்கக் கடன் மத்திய நிலையத்தையும் அமைத்துள்ளது.

HNB FINANCE தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மாறுபடும் பல தங்கக் கடன் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

# SLT-MOBITEL நாட்காட்டி கண்டல் தாவர கட்டமைப்பில் கவனம்



சூழல் பாதுகாப்பில் தனது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்யும் வகையில், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, 2024 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியை, "இலங்கையின் கண்டல்தாவர சூழல்கட்டமைப்பு" எனும் தொனிப்பொருளில் அறிமுகம் செய்துள்ளது.

நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த கண்டல்தாவர கட்டமைப்பின் சூழல்சார் முக்கியத்துவத்தையும், அழகையும் கொண்டாடும் வகையில் இந்த நாட்காட்டி அமைந்துள்ளதுடன், நாட்டின் இயற்கை பாரம்பரியத்தின் பெறுமதியை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

உலகளாவிய ரீதியில் கண்டல்தாவர கட்டமைப்பு வேகமாக அழிவடைந்து வருகின்றன.

இலங்கைக்கு உயிரியல் பரம்பலையும் காலநிலை மாற்ற மீண்டெழுந்திறனையும் வழங்குவதில் கண்டல்தாவரங்கள் ஆற்றும் பங்களிப்புக்கு முக்கியத்துவமளித்து தனது 2024ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியில் இதனை உள்வாங்குவதற்கு ளுடுவு-ஆழுடீஐவுநுடு தீர்மானித்திருந்தது.

அத்துடன், நாட்டில் எஞ்சியிருக்கும் கண்டல்தாவரங்களை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பில் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் இந்த தீர்மானத்தை மேற்கொண்டிருந்தது.

# மக்கள் வங்கியின் 1990 சுவசெரிய அம்புலன்ஸ் நன்கொடை




இலங்கையில் அனுமதி உரிமம் கொண்ட முதன்மையான வணிக வங்கியான மக்கள் வங்கி, 1990 சுவசெரிய அறக்கட்டளையின் முயற்சியான 'Adopt an Ambulance' திட்டத்தின் கீழ் 1990 சுவசெரிய அம்புலன்ஸ் ஒன்றுக்கான அனுசரணைக்கு நன்கொடையளித்துள்ளமை தொடர்பில் அறிவித்துள்ளது.

நாடெங்கிலும் அம்புலன்ஸ் சேவையினூடாக இலவச அவசர மருத்துவ உதவியை வழங்குவதற்காக 2016 ஆம் ஆண்டில் சுவசெரிய சேவை ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் வங்கியின் வர்த்தக சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமான" Mahajana Mehevara' என்பதன் கீழ், இலங்கை சமூகங்களின் நலனை மேம்படுத்துவது சார்ந்த மக்கள் வங்கியின் தொடர்ச்சியான முயற்சிகள் மற்றும் நாட்டின் சுகாதாரத்துறை கட்டமைப்பிற்கு உதவுவதில் அது கொண்டுள்ள அர்ப்பணிப்பின் அங்கமாக இந்த அனுசரணை வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் தலைவர் திரு. சுஜீவ ராஜபக்ச அவர்கள் இதற்கான அனுசரணையை சுவசெரிய அறக்கட்டளையின் தலைவரின் கையளித்து வைத்து கருத்து வெளியிடுகையில், "இலங்கை சமூகங்களுக்கு பல்வேறு வழிகளிலும் உதவுவதற்கு மேற்கொண்டு வருகின்ற எமது முயற்சிகளில் முக்கிமானதொன்றாக அம்புலன்ஸ் சேவைக்கு மக்கள் வங்கி வழங்கியுள்ள இந்த அனுசரணை காணப்படுகின்றது. தேசத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒரு வணிக நிறுவனம் என்ற வகையில், இலவச அவசர மருத்துவ சேவைகளுக்கான வசதியைக் கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நாம் புரிந்தகொள்கின்றோம். என்று குறிப்பிட்டார்.